Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 583/2024

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.5 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | டி.வி.மெக்கானிக் |
| பெயர். | - | சீனிவாசன் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | சண்முகம் | சமயம் | - | |
| கிராமம் | - | ஏமப்பூர் | வயது | - | 38 |

21.01.2026

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது ஏமப்பூரில் வசித்து திருவெண்ணெய்நல்லூரில் டி.வி.மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். அ.சா.1-ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு மதியம் 02.00 மணியளவில் சாப்பிடுவதற்காக சென்ற போது எதிரி கடை அருகில் போலீசார் சண்டை வழக்கு சம்மந்தமாக கட்டம் கட்டி மேப் போட்டார்கள். அதற்காக போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும்**. நான் சண்டையை பார்க்கவில்லை என்று போலீசாரிடம் தெரிவித்தேன்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை போலீசார் என்னிடம் பூர்த்தி செய்யாத பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். **அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும்**. போலீசார் விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)**

கடந்த 26.08.2023ம் தேதி 14.15 மணியளவில் போலீசார் சம்பவ இடத்திலிருந்து அரைகிலோ எடையுள்ள சுத்தி ஒன்றை என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்கள் என்றாலும், மேற்படி கைப்பற்றுதல் மகசருக்கு நான் சாட்சியாக இருந்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

படம் வரைந்த பேப்பரில் தான் கையெழுத்துபோட்டேனா என்றால் ஆமாம். இன்னொன்றில் எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம்.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 583/2024

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.6 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | டைலர் |
| பெயர். | - | முருகன் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | கிருபாபுரி | சமயம் | - | |
| கிராமம் | - | திருவெண்ணெய்நல்லூர் | வயது | - | 48 |

21.01.2026

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது ஏமப்பூரில் வசித்து திருவெண்ணெய்நல்லூரில் டைலராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1-ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு மதியம் ஒரு நாள் சண்டை வழக்கு சம்மந்தமாக படம் வரைந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். **அந்த பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.4 ஆகும்**.

2. அதன் பிறகு மற்றொரு பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை போலீசார் என்னிடம் பூர்த்தி செய்யாத பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். **அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.5 ஆகும்**. போலீசார் விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)**

கடந்த 26.08.2023 ம் தேதி 14.15 மணியளவில் போலீசார் சம்பவ இடத்திலிருந்து அரைகிலோ எடையுள்ள சுத்தி ஒன்றை என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம்

கைப்பற்றினார்கள் என்றாலும், மேற்படி கைப்பற்றுதல் மகசருக்கு நான் சாட்சியாக இருந்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.